இராமானுஜர்

331

சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1924

காபிரைட்] [விலை ஒரு அணா.



திருமந்திரார்த்த பிரதானம்] [IO - ஆம் பக்கம் பார்க்க.

இராமானுஜர்

கி. பி. பதினோராவது நூற்றாண்டில், நமது தேசத்தில், வைஷ்ணவ மதத்தை நிலைநிறுத்திப் பரவச்செய்து, அதில் பல சீர்திருத்தங்களையுஞ் செய்தவர் ஸ்ரீமது இராமானுஜர் என்னும் மஹான். அவர் இளைய ஆழ்வாரென்று வைஷ்ணவர்களால் வழங்கப்பெறுவர்.

அவர் பிறந்தவூர் செங்கற்பட்டு ஜில்லாவில் ஸ்ரீ பெரும்பூதூர் என்பது. அவர் தந்தை அவ்வூர் ஆசூரி கேசவப்பெருமாளென்பார். அவர் அன்னை ஸ்ரீ பூமிப் பிராட்டியாரென்பாள். அவள், ஸ்ரீரங்கத்தில் வைஷ்ணவ சமயாசாரியராயிருந்த, ஆளவந்தாரின் பௌத்திரி. இராமானுஜர், இளமையிலேயே தந்தையை இழந்ததோடு எளிய குடும்பத்தினராயுமிருந்தது பற்றி, தனது மாமனால் காப்பாற்றப்பட்டார். குலமரபிற்கேற்ப நாமகரணம், சௌளம், உபநயனாதிகள் சழிந்த பிறகு, அவர், சாஸ்திரோக்தப் பிரகாரம் வேதாத்தியயனஞ் செய்து, தனது சிறிய தாயின் புத்திரரான கோவிந்தப்பட்டருடன், காஞ்சீபுரத்தில் சைவாசிரியரான யாதவப் பிரகாசரிடம், வேதாந்தம் சுற்று வந்தார்.

கற்று வருகையில், ஒருநாள், சைவசமயத்தைச் சார்ந்தவரும் வைஷ்ணவத் துவேஷியுமான யாதவப்பிரகாசர், வேதத்தில் அநேக சுருதி வாக்கியங்களுக்கு விபரீத அர்த்தஞ் செய்தார். உடனே இராமானுஜர், குரு கூறினதை நிஷேதித்துத் தனக்குத் தோன்றின மெய்ப்பொருளை வெளியிட்டார். அவருடன் படித்த மாணவர்கள் பலரும் ஆசிரியர் கூறியதினும் இராமானுஜர் உரைத்த பாஷியமே சிலாக்கியமென்று தத்தம் மனதுள் எண்ணுவாராயினர். யாதவப் பிரகாசரோ, தான் சொல்வதே சரி யென்று சீடர்கள் நம்பவேண்டுமென்று ஆக்கினையிட்டனர். பிறகு தான் சொல்லுவதை இராமானுஜர் ஆக்ஷேபிக்கும்போதெல்லாம் அவரை யவமதித்தும், சடிந்தும் வந்தனர்.

குருவுக்கும் இராமானுஜருக்கும் இவ்விதத் தர்க்கங்கள் அடிக்கடி சம்பவித்தன. ஒருநாள் குருவுக்கு இளையஆழ்வார் மங்கள ஸ்நானஞ் செய்விக்கும்போது, குரு, தனது பல சீடர்களுக்கும், விஷ்ணுமத தூஷணஞ் செய்து, ஓர் உபநிஷத் வாக்கியத்துக்கு, பொருளுரைத்தார். அவ்விதம் உரைக்குங்கால் அவருக்கு எண்ணெய் தேய்த்து நின்ற இராமானுஜர் அவர் கூறியபொருளைச் செவியேற்று, மனங் கொதித்துக் கண்சிவந்து கண்ணீர் உகுப்பதாயினர். அவர் கண்ணினின்றும் வீழ்ந்த நீர் துளியொன்று குருவினுடலிற் படவே, குரு நெருப்புப் பட்டாற்போல் வருந்தினர். இராமானுஜரை யண்ணாந்து பார்த்து, சோகித்திருப்பது யாதுபற்றி யென்று வினவினர். பிறகு உண்மையை யறிந்து, அத்தகைய சீடனால் தனக்குக் கேடு வருமென்று நினைத்து அவனை ஒழிக்க, ஒரு சூழ்ச்சியைத்

தேடினார். அஃதவாது, கங்கா யாத்திரை போவதற்கு எல்லாச் சீடர்களையும் உடன்படுத்தி, கங்கை சென்று ஆங்கு நீராடும் கட்டத்தில், ஆழமான ஓரிடத்தில், இராமானுஜரைத் தள்ளி அமிழ்த்திவிடவேண்டுமென்பதே.

அக்கெடுசூழ்ச்சியின் விவரம் குருவுக்கு அந்தரங்கமான சில சீடர்களுக்கே தெரிந்துளது. ஏனையோர் அதை கனவிலும் நினைந்திலர். ஆகவே, சீடர் யாவரும், கங்கையை நோக்கிக் கூட்டங் கூட்டமாய்ச் சென்று வழியிடையே விந்தியமலைப் பிரதேசத்தில் ஓர் பள்ளத்தாக்கில் ஓரிரவில் தங்கலாயினர். அன்றிரவில், இராமானுஜருக்குத் தாய்வழியில் தம்பிமுறையாகவுள்ள கோவிந்தப்பட்டர் என்பார், குரு கங்கா யாத்திரைக்குத் தங்களை யழைத்துப் போவதின் முக்கிய கருத்தென்னவென்றாய்ந்தறிந்தார். அறிந்ததும், அதை இராமானுஜருக்கு இரகசியமாகச் சூசிப்பித்தார். அவ்விரவே, அவர், அப்பால் அகன்று போகும்படி உத்தேசித்தார். பொழுதுவிடிவதற்கு ஒரு ஜாமத்திற்கு முன்னதாகவே அத்தீர்த்த யாத்திரை செல்பவர்கள் மீண்டும் வழி நடக்கச் சென்றபோது, என்றும்போல் அன்றும், இராமானுஜர் ஏதாவது ஒரு சீடர்க்கூட்டத்தில் வருகிறதாகவெண்ணி யாதவப் பிரகாசரும் தன் வழிச்சென்றார். காதவழிச் சென்றதும், குரு தான் கண்ணி வைத்திருந்த முக்கிய சீடன் ஒளித்தோடினன் என்றறிந்தார். அறிந்ததும், அவனைத் தேடிக் கண்டுபிடிப்பதும் அசாத்தியமென்று தெளிந்தார். யாத்திரையை முடக்கி ஊருக்குத் திரும்பிச் சென்றால் அவருடைய தீய கருத்து சட்டென்று வெளிப்படும் அல்லவா?

ஆனதுபற்றி மீண்டும் கங்கையை நோக்கிச் செல்வதே உத்தம மென்றெண்ணி அவ்வாறு செல்வதாயினர். இது நிற்க,

இளைய ஆழ்வார் வனத்திடை நள்ளிரவில் ஏகாந்தமாய் உணவும், பொருளும், துணையுமின்றி, வழியுமறியாது 'பெருமாளே, இனி என் செய்வது' என்று வியாகுலப்பட்டு மதிகலங்கி நிற்பாராயினர். பகவனும், தனது பக்தசிரோன்மணியிடம் அருள் கூர்ந்து தம்பதி சமேதராய் வேடுவர் வேடம் பூண்டு, வனத்திடை, இராமானுஜர் முன் தோன்றினர். தன் முன் பிரசன்னரான தெய்வ தம்பதிகளை வேடுவமாபினரென்றே இளையாழ்வார் நினைத்து, தனக்கு நேர்ந்த அபாயத்தை யுரைத்து, தன்னை அதினின்றும் தப்புவிக்கும்படி அவர்களை வேண்டினர். அவர்களும், அவ்வேண்டுகோளுக்கிசைந்து, முன்வழி நடக்க, இராமானுஜர் பின் தொடர்ந்தார். காஞ்சீபுரத்தருகே ஓர் வனத்தை யடைந்து, ஆங்குத் தங்கும்போது, வைகறையாமத்தில், வேடுவச்சி தாகத்தினால் வருந்தி நின்றனள். அதைக் கண்டு இராமானுஜர் ஓர் கிணற்றில் தண்ணீர் மொள்ளச் சென்றார். உடனே தெய்வ தம்பதிகள் மறைந்தனர். தாக சாந்திக்காகத் தண்ணீர் கொண்டுவந்த இராமானுஜர் அவர்களைக் காணாராகி அங்குமிங்கும் ஓடித்தேடினர். தேடியும் பயனற்றுக் குணதிசை சென்றனர். அங்குக் காஞ்சீபுரத்து தேவராஜசுவாமி கோயிலின் சிகரங்கள் அவர் கண்ணுக்குப் புலப்பட்டன. ஆங்குவந்த பிரயாணிகளிடம் அவ்வூர்யாதெனக் கேட்டறிந்து மனமகிழ்ந்து தன்னை அபாயத்தினின்றும் விடுவித்த கடவுளை வணங்கித் துதித்துக் கச்சிநகரை யடைந்தார். பிறகு, தன் அன்னை உறையும் குடிசில் சென்று வழியில் தனக்கு நேர்ந்தன

யாவற்றையும் அவளுக்குக் கூறி அவள் அபிப்பிராயப்படி பிரமசரிய ஆச்சிரமத்தைவிட்டு நீங்கி சம்சார ஆச்சிரமத்தில் புகுந்து, தினமும் தேவராஜப்பெருமாள் திருவாராதனத்துக் குதவும்படி திருமஞ்சனங் கொணர்ந்து சமர்ப்பித்து, சுவாமியைத் தரிசித்து, வைஷ்ணவ மதத்திற்குரிய பல கலைகளையும் ஓதிவந்தனர்.

இவ்வாறிருக்கையில், இராமானுஜருக்குத் தாய்வழியில் முப்பாட்டரான திருவரங்கத்து ஆளவந்தாரென்னும் ஆசிரியர் தனதுலகவாழ்க்கையின் முடிவுகிட்டபோவதை அறிவாராயினர். அப்போது, இராமானுஜரின் மதாபிமானம், தெய்வபத்தி, புத்திகூர்மை, சாஸ்திரஜ்ஞானம் முதலியவைகளை நன்கு உணர்ந்து முன்னர் மகிழ்ந்திருப்பவராதலின் தனக்குப் பின் தனது ஸ்தானத்தில் ஸ்ரீரங்கத்து வைஷ்ணவ ஆசிரியப்பட்டம் வகித்தற்கு அவரே தகுந்தவரென்று கூறித் தானிறக்குமுன் அவரையழைத்துவரும்படி தனது பிரதம அடியாரான பெரியநம்பியை அனுப்பினர்.

பெரியநம்பியும் கடிதில் கச்சிசென்று இளைய ஆழ்வாரை அழைத்துக்கொண்டு திருவரங்கத்தை நோக்கிப்புறப்பட்டார். அவ்விருவரும் அரங்கம் வந்து சேருமுன் ஆளவந்தார் உயிர் நீத்தார். இறந்தவருடலைத்தகனஞ்செய்ய, அவரது ஏனைய அடியார்கள், அதைக் கொள்ளிடத்தின் தென்கரைக்குக் கொண்டுசேர்ந்தனர். அத்தருணத்தில், பெரியநம்பியுடன் இராமானுஜர் ஆங்கு தற்செயலாய் வரவே, ஆளவந்தாரின் உடலைத் தரிசித்தார். தரிசிக்கையில், குருவுடலின் வலக்கையில் திருவிரல்

கள்மூன்று முடங்கிக் கிடக்கக் கண்டனர். விரல்கள் அவ்வாறு முடங்கினமை குரு உயிர் துறந்ததற்கு முன்னோ பின்னோவென்று அயலில் நின்றோரை வினவினர். உயிர் நீத்த பின்னே விரல்கள் அவ்வாறாயினவென்று அவர்கள் கூறக்கேட்டு, அப்படியிருப்பதின் காரணம் யாதென்று ஆராய்ந்தார். ஆளவந்தார் தான்செய்ய மனங்கொண்ட பல காரியங்களுள் மூன்று நிறைவேறாது நின்றனவென்றுணர்ந்தார். அவையாவெனக் கேட்டறிந்து, தான் அவற்றைச்செய்துமுடிப்பதாக இளைய ஆழ்வார் வாக்களித்தார். வாக்களித்ததும் முடங்கிக்கிடந்தவிரல்கள் நீண்டன. இவரும் வாக்களித்தபடி தம் வாழ்நாள் கழியுமுன், அம்மூன்று காரியங்களையுஞ் செய்து முடித்தனர். காலஞ்சென்ற ஆளவந்தாருக்குச் செய்யவேண்டிய கிருத்தியங்களெல்லாஞ் செய்து, திரும்பவும் கச்சிநகர் சேர்ந்து பெருமாளைப் பூசைசெய்து வந்தனர்.

இவர், இவ்வாறு காலங்கழித்து வருகையில், ஒரு தினம் ஆங்குவந்த பெரியநம்பியிடம் மந்திராரத்தினமான சில இரகசியங்களை உபதேசம் பெற்றார். இன்னும் சில தேவ ரகசியங்களையும் திராவிடவேதப்பிரபந்தங்களையும் பெரியநம்பியிடம் கேட்டுணர விரும்பி அவரைக் குடும்ப சகிதம் கச்சியில் தன்னுடன் தங்கும்படி வேண்டினர். பெரியநம்பியும் அவ்வாறுபதேசிக்க மனமிணங்க, அவ்விருவரும் கச்சியில் ஒரே கிருகத்தில் ஒட்டுக்குடியாகத் தத்தம் குடும்ப சகிதம் வாழ்ந்து வந்தனர்.

வாழுங்கால், இராமானுஜர் மனைவிக்கும் திருநம்பியின் நங்கைக்கும் அடிக்கடி சச்சரவு நேரிட்டது. தன் மனைவிதான் கலகத்திற்கு மூட்டென்று இராமானுஜர் நன்குணர்ந்தார்.

இதுவுமல்லாமல், தன் மனைவி தன்னோடு மன மொருமித்தவளல்லளென்று எண்ணுவதற்குப் பல சான்றுகள் ஏற்பட்டன. அவை யாவன:—

1. இராமானுஜர் ஒருதினம் தன்னில்லத்திற்குத் திருக்கச்சி நம்பியென்றகோயில் அர்ச்சகக்கைங்கரியம் நடாத்துபவரை அமுதுசெய்ய அழைத்தார். அழைத்ததற்கிணங்கி, நம்பி இராமானுஜர் வீட்டில் அமுதுசெய்து போயினார். போனதும், விருந்திட்ட தேவி அவர் அமுதுசெய்த தளிகையைக் கோலாலே தள்ளி அவ்விடத்தையும் அவர் சென்ற வழியையும் கோமயத்தால் சுத்திபண்ணித் தானும்நீராடி நின்றாள். இவை யனைத்தையும் கண்ட இராமானுஜர் "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று அவளைக் கேட்க, அவளும் தாழ்ந்த வருணத்தவனான நம்பிக்கு அன்னமிட்டதால் தானும் தன்னில்லமும் அசுத்தப் பட்டதாகவும் அவ்வசுத்தத்தினின்றும் நிவர்த்திசெய்தற்பொருட்டுத் தான் அவ்வாறெல்லாம் செய்ததாகவும் மறுமொழி கூறினாள். இராமானுஜரும் அவளைக் கோபித்து மூடத்தனமான கோட்பாடுகளுக்கு மிகுந்த பிடிவாதத்துடன் அவள் பற்றியிருந்தமையைக் கண்டு வருந்தினார்.

2. மற்றொருதடவை இராமானுஜர் தேவராஜப் பெருமாளுக்கு முறைப்படி திருமஞ்சனஞ் சமர்பிக்கச் சற்று விரைவாய்ச் செல்லும்போது, ஓர் இரவலன் அவரிடஞ் சென்று தான் பசியால் மிக்கு வருந்தினதாகக் கூறி உணவு யாசித்தான். இராமானுஜர், 'யாசகா! இவ்வூரில் இன்னதெருவில் என் கிருகமுளது. அக்கிருகத்திற்குச் சென்று என் மனையாளிடம் உணவுகேள். உன்னை யான் அனுப்பிவைத்ததாக அவளிடஞ் சொல்.

அவளிடம் உணவை யருந்தி பசியைத் தீர்த்தொழி' என்று கூறினார். வறியோன் இராமானுஜர் திருமாளிகை சென்று யாசித்ததும், அவர் மனைவி, தங்களுக்கென்று தளிகைசெய்த உணவிருந்தும், ஒன்றுமில்லை யென்று அவனுக்கு விடை கூறினள். அவ் வறியோனும் அம்பலஞ் சென்று தனக்கு உணவு கிட்டிலதென்று இராமானுஜரிடம் தெரிவிக்க, அவரும் வீடு சென்று உணவிருந்ததைக் கண்டு தேவியின் உலோபத்தையும் இதர தீக்குணங்களையுங் குறித்துப் பலவாறு பழித்தார். அத்தடவை அவளுக்கு மன்னிப்பு அளித் தருளினார்.

3. பின்னொருநாள், இளைய ஆழ்வார் தேவியும் பெரிய நம்பியின் மனைவியும் ஓரே கிணற்றில் ஏககாலத்தில் தண்ணீர் மொள்ளும்போது இராமானுஜர் மனைவி தண்ணீர் நிறைத்த தோண்டியில் மற்றையோரெடுத்த குடத்து நீர்த்துளி யொன்று தெறித்தது. தெறிவிக்கவும், தனது தோண்டி அசுத்தப்பட்டதென்று அட்டகாஸம் பண்ணிக் கொண்டு இராமானுஜர் மனைவி அவளை பழிப்பதாயினள். அப்போது அவ் விருவருக்கும் தத்தம் குலகோத்திர விஷயமாய்ச் சில வாக்குவாதங்கள் நடந்தன. இவ்விருத்தாந்தங்களைக் கேட்ட திருநம்பி உடனே தன் மனையாளை யழைத்துக்கொண்டு இராமானுஜருக்குத் தெரிவியாமல் திருவரங்கத்துக்கேகினர். பிறகு, நம்பி தன்னிடம் தெரிவியாமல் திடீரென ஊர்நீங்கி அப்பால் அகன்றது யாது காரணம்பற்றி யென்பது இராமானுஜருக்குத் தெரியலாயிற்று. தெரிந்ததும், அவர் மிகவும் வருந்தி, எப்போதும் அல்லலுடன் சுகமின்றித் தன் மனையாளுடன் இல்லறம் நடாத்துவதினும் துறவறம் பூண்டலே நன்றென எண்ணுவாராயினர். அத்தரு

ணத்தில், தற்செயலாய் தன் மனையாள் பிறந்தகத்திற்குச் செல்லவே, தான் காஷாயம் வாங்கிக்கொண்டார்.

சந்நியாசம் பூண்டபிறகு, அவ்வாச்சிரம தர்மங்களைக் குறைவற நடத்தி பிக்ஷை யெடுத்துண்டு வந்தனர். அப்போது அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. இதர மதஸ்தர்களிற் பலர் அவரது உபந்நியாசங்களையும் தர்க்கங்களையும் கேட்டு அவரை வணங்கி விஷ்ணுபக்தர்களானார்கள். மேலும், அநேக *யதிகள் அவரைச் சார்ந்தனர். எனவே, யதிராஜன் என்று பெயரிட்டு வழங்கப்பட்டார். இவ்வாறிருக்கையில், யாதவப்பிரகாசர் கங்கை சென்று நீராடிவரவும் தன் மாணாக்கனாகிய இராமானுஜர் புகழ் நாடெங்கும் ஓங்கியிருந்ததைக்கண்டு தான் அவரிடஞ் சென்றுமன்னிப்பு வேண்டினர். தனக்குக் குருசெய்தகொடுமைகளைச் சற்றும் பாராட்டாது இராமானுஜர் அவற்றை யெல்லாம் க்ஷமையுடன் பொறுத்தனர். பிறகு அவ்விருவருக்கும் மதவிஷயமாகச் சில தர்க்கமுண்டாயிற்று. தர்க்கத்தில் இராமானுஜர் அவரை வென்றதும் அவரும் வைஷ்ணவ நெறியைப் பூண்டனர். இராமானுஜரின் சிறியதாயின் குமாரனான கோவிந்தப்பட்டர் என்பார் கங்கையில் நீராடும்போது உள்ளங்கையில் ஒரு சிவலிங்கத்தைப் பெற்று சைவஸ்தலமாகிய சீகாளத்தி என்னும் ஊரில் சிவபூஜை செய்துவருவாராயினர். அவர் அவ்வாறிருப்பதை இராமானுஜர் கண்டதும் அவரோடு சற்று சம்பாஷித்து அவரை முன்போலவே விஷ்ணுபக்தராக்கினர். அக்காலத்தில்

---

* யதிகள்—முனிவர்கள்.

பல வீரசைவர்கள் இராமானுஜரின் உபதேச மகிமையினுல் தாமாகவே வைஷ்ணவசமயத்தை விரும்பித் தழுவுவாராயினர்.

இவ்வாறெல்லாம் இராமானுஜர் கியாதிபெற்றது அவருடைய சாஸ்திர ஞானத்தினுல் மாத்திரமென்று, அவர் பெற்ற தெய்வகடாக்ஷத்தினுலுந்தான். பிறரோடு வாதிக்குங் காலத்துச் சாஸ்திரங்களினின்றும் தக்க ஆதாரங்களை அவர் எடுத்துரைக்க இயலாதிருந்தபோது தெய்வம் அவரது பிரார்த்தனைப்படி அவருக்குப்பலதடவைஏற்றஉதவிபுரிந்து வந்ததாம். பிறர் செய்யவொண்ணுத சில அரிய செயல்களை இராமானுஜர் தெய்வ உதவியால் செய்து வந்தனர். இதற்கு உதாரணமாக, சில அரசர் குடும்பங்களில் பெண்களுக்குப் பிடித்த பேய்கள் பிறரோட்ட ஓடாது இவரோட்ட ஓடினவாம்.

இப்படிச் சிலகாலங் கழிந்தபின்னர், ஆளவந்தாரின் அடியார்கள் வேண்டுதலால் அவரது ஸ்தானத்தை வகிக்க இராமானுஜர் திருவரங்கத்துக்குச் சென்றார். அவ்விடஞ் சென்றதும் பற்பல நூல்களைக் கற்பதாயினர். இப்படிக் கற்றுவருகையில், ஆத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்யும் சிலமந்திர இரகசியங்களைத் திருக்கோட்டியூர் நம்பியிடம் உபதேசம் பெற முயன்றார். பதினெட்டு முறை நம்பியிடஞ் சென்றும் நம்பி உபதேசித்தருளவில்லை. பிறகு, ஓர் தினம் தான் உபதேசிக்கும் திருமந்திரத்தை வெளியிடக்கூடாதென்று இராமானுஜரை ஓர் சத்தியத்துக்குக் கட்டுப்படுத்தி, திருநம்பி மந்திர இரகசியத்தை அவருக்கு வெளியிட்டார். மந்திரத்தின் பொருளை யுணர்ந்ததும், இராமானுஜர் கோயிலின் மதிலிலேறி அதை யாவருமறிந்து

மோக்ஷ மடைய வழி தேடும்படி உரக்க உச்சாரணஞ் செய்தார். இதைக் கேட்டு வெருண்ட திருநம்பி இராமானுஜரை தன் சந்நிதானத்துக் கழைத்து, அவர் கூறிய உறுதிமொழிப்படி நடவாது சொல்மாறினதற்காக "நரகம் அடைக" என்று சபித்தார். இராமானுஜரும் "தேவரீருக்கு ஒரு விண்ணப்பம். இம்மந்திரத்தைக் கேட்டு யாவரும் உய்யும்பொருட்டு அடியேன் நரகமடைந்தாலும் அடைகிறேன். யானொருவன் முத்தியடையேனாயினும் பலர் முத்தியடைவரன்றோ? அதுவே தகுந்த பரிசில்" என்று மறுமொழி கூறினர். இராமானுஜரின் கம்பீரமான நோக்கத்தைத் திருநம்பி கேட்டதும் அகமகிழ்ந்து அவர் செய்த பிழையைப் பொறுத்துத் தானிட்ட சாபம் தீருமாறு அவரை ஆசீர்வதித்தனர். பிறகு, இராமானுஜர் தான் ஆளவந்தாருக்கு வாக்களித்த மூன்று காரியங்களையும் நிறைவேற்றினர். அவைகளில் முக்யமானது, ப்ரஹ்ம சூத்திரத்திற்குப் பாஷியம் எழுதினதாம். மிகச் சிலாக்யமான வுரை யாதல்பற்றி அவ்வுரைக்கு ஸ்ரீ பாஷியம் என்று பெயர் வழங்கி வருகிறது. அத்தகைய பாஷியம் எழுதினமைபற்றி இராமானுஜர் ஸ்ரீ பாஷியக்காரர் என இன்றும் வழங்கப்பெருகின்றர்.

அநேக சாஸ்திரிகள் இராமானுஜரிடம் தர்க்கித்து வைஷ்ணவ மதத்தின் மகிமையையுணர்ந்து அதை அடைந்தாரெனினும் அக்காலத்தில் வீர சைவமதத்தைச் சார்ந்தவர் பலரிருந்தார். இவர்களில் சிலர் இராமானுஜர் விண்டு மதத்தைப் பரவச் செய்ததைக்கண்டு பொறாமை கொண்டோ வேறு காரணத்தினலோ அக்காலத்து இளைய ஆழ்வார் வசித்த நாட்டரசனாகிய

குலோத்துங்க சோழனிடஞ்சென்று விண்டுமதம் அபிவிருத்தி யாகாதபடி அதைக் கண்டனஞ் செய்ய வேண்டுமென்று முறை யிட்டனர். அரசன் சைவ சித்தாந்தியாயினும் ஏனையமதத் துவேஷியல்லன். என்றாலும், தன்னவையோர் தூண்டுதலால் வைஷ்ணவத்துவேஷியாய்விட்டான். அப்போது சிவனுக்குமேல் வேறொரு தெய்வமுமிலது என்று பொருள்பட 'சிவாத்பரதரம் நாஸ்தி' யென்று ஓலைகளில் எழுதித் தன்னாட்டில் யாவரும் அதற்கிணங்கிக் கையெழுத்திடுமாறு ஆக்கினை செய்தான். இணங்காதோரைப் பலவாறு தண்டித்தும் வந்தான். அவ் வோலைகள் திருவரங்கத்துக் கனுப்பப்படவே ஆங்குள்ள வைஷ் ணவர் யாவரும் ஓலையில் எழுதப்பட்டுள்ளதற்கு இராமானுஜர் இணங்குவாராயின் தாமும் அதற்கிணங்குவதாகக் கூறினர். உடனே, அரசன், இராமானுஜரைத் தன் கொலுவீற்றிருக்கை க்கு அழைத்து, ஆங்கு, பலர் முன்னும் சிவாத்பரதரம் நாஸ்தியென்று அவரை ஓலையில் எழுதிவிடச் செய்யலாமென றெண்ணி அவரைக் கொண்டுவரும்படி தூதுவரை ஏவினன். அரசனின் கருத்தை இராமானுஜரின் முக்கிய சீடராகிய கூரத் தாழ்வார் ஊகித்தறிந்ததும், தன் குரு சென்றால் தண்டிக்கப் பட்டுத் தம் மதத்திற்கு அவர் செய்ய நினைத்திருக்கும் பல சீர்திருத்தங்களும் செய்யப் பெறாது ஒழியுமென்றெண்ணி குரு வுக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைத் தவிர்க்க ஓர் உபாயந்தேடி னர். இராமானுஜரின் உடையை வாங்கித் தான் தரித்துக் கொண்டு, கண்டோர் யாவரும் தன்னையே இராமானுஜர் என் றெண்ணுமாறு வேஷம்பூண்டு, கூரத்தாழ்வார் பெரிய நம்பியு டன் அரசன் அவைக்குச் சென்றார்.

இதற்குள் இராமானுஜர் மாறுவேடந் தரித்து மைசூருக்குத் தப்பியோடிச் சென்றனர். ஆங்குப் பல வைஷ்ணவ ஆலயங்களைப் புதிதாக ஏற்படுத்தினர். மைசூராசனையும் விண்டு பக்தராக்கினர். காசி, டெல்லி, காஷ்மீரம் முதலான இடங்களுக்குச் சென்று, தன் ஸ்ரீ பாஷியத்தைப் பல வித்வான்களின் சபைகளில் அரங்கேற்றினர். முற்காலத்து மகம்மதிய அரசர்கள் கோயில்களைக் கொள்ளை யடித்துக் கவர்ந்து சென்ற பல வைஷ்ணவ விக்கிரகங்களை டெல்லி சக்கரவர்த்தியின் அரண்மனையினின்றும் கைவசமாக்கி மைசூரில் பற்பல கோயில்களில் அவைகளை ப்ரதிஷ்டை செய்தார். இப்படி இராமானுஜர் மகம்மதிய அரசனிடமிருந்து விக்கிரகங்களை மீட்டதைப் பற்றி ஓர் அற்புதமான வரலாறுண்டு. ஒரு தடவை அவர் டெல்லி சக்கரவர்த்தியிடஞ்சென்று பிம்பங்களைத் திரும்பக் கொடுக்கும்படி வேண்டினபோது, சக்கரவர்த்தி, "ஐயா உம்முடைய பிம்பங்களின் மகிமையைப்பற்றித் தோன்றினவாறெல்லா முரைத்தீர். நீர் உரைத்தபடி அவைகள் மகிமையுடையனவாயின், நமது பொக்கிஷ அறையில் அதோ கிடக்கும் பிம்பங்களை விளித்தழைக்க அவை வருமாயின் கொண்டு செல்லும்," என்று அலட்சியமாகக் கூறினர். இதைக் கேட்ட இராமானுஜர், தான் பலர் முன்னும் மானபங்கப்படாது, சக்கரவர்த்தி யுரைத்தபடி, பிம்பம் தானழைக்கத் தனியே நடந்தருளவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்தார். பிரார்த்தித்து அழைக்கவே, யாவரும் அதிசயிக்க, பிம்பங்கள் சுயேச்சையாய் நடந்து இராமானுஜரைச் சேர்ந்தனவாம். இவ்வற்புதத்தைக் கண்ணுற்ற சக்கரவர்த்தி இளைய ஆழ்வாருக்குத் தக்க மரி

யாதை செய்து அவர் வேண்டிய பிம்பங்களை யாதொரு தடையு மின்றி ஈந்தருளினாராம்.

இராமானுஜர் விக்கிரகங்களைக் கொண்டு திரும்பிச் செல்லும் வழியில், மைசூரருகில் சில துருக்கர்கள் அவரிடமிருந்து விலையுயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற பிம்பங்களைக் கவரக்கருதி அவரைப் பிடிப்பதற்குத் துரத்திவந்தனர். அப்போது மேலுக்கோட்டென்னுமூரிலுள்ள பறைச்சேரி வாசிகள், அவர் வேண்டு கோளின்படி, அடைக்கலங் கொடுத்து அவர் உயிரையும் பொருளையும் பாதுகாத்தனர். ஆனதுபற்றி, அப்பறையர்களிடத்தில் நன்றிபாராட்டி இராமானுஜர் அவ்வூரில் ஓர்கோயில் கட்டுவித்துப் பிம்பத்தை பிரதிஷ்டைசெய்து அவ்வூருக்குத் திருநாராயணபுர மென்று திருநாமஞ் சாத்தி வருஷாந்த உத்ஸவந்தோறும் ஓர்தினம் பஞ்சமர்கள் கோயிலினகத்து மூலஸ்தானம் வரை சென்று தரிசிக்க அநுமதியும் வாங்கிக்கொடுத்தார். இவ்வழக்கம் இக்காலத்தும் நடந்தேறிவருகிறது. இது நிற்க,

கூரத்தாழ்வாரும் பெரியநம்பியும் சோழன் கொலுவையடைந்ததும், அரசனும் அவன் அவையோரும் கூரத்தாழ்வாரின் நடையுடை பாவனைகளைக்கண்டு, அவரே இராமானுஜரென்று மாறுகக் கருதி, ஓலை எழுத்தாணி கொடுத்து, சிவாத்பரதரம் நாஸ்தியென்று அபிப்பிராயப்பட்டதாக எழுதும்படி வற்புறுத்தினர். தன்னை நிர்பந்திப்போரை அவமதிக்க எண்ணிக் கூரத்தாழ்வாரும் சிவாத்பரதரம் நாஸ்தியென்றெழுதி, அவ்வாக்கியத்தோடு துரோணமஸ்திதத:

பாம்' என்றும் எழுதினர். நிகண்டின்படி, 'சிவம்' என்றால் குறுணி, அதாவது எட்டுப்படி; 'துரோணம்' என்றால் பதக்கு, அதாவது பதினாறுபடி, ஆகவே கூரத்தாழ்வார் சேர்த்த பதத்தின் பொருளென்னவென்றால், சிவமென்ற அளவுக்குமேல் துரோணமென்ற அளவு உண்டென்பதாம். இவ்வாறு சிவனுக்குமேல் வேறொரு தெய்வமுண் டென்று சொற் சாதுரியத்தினால் கூரத்தாழ்வார், சோழனையும் அவனவையோரையும் அவமதித்தனர். அவமதிக்கவும், அரசன் மிகுந்த கோபங்கொண்டு, ஆழ்வாரின் கண்களை பழுக்கக் காய்ச்சின இருப்புக்கோலால் சுடும்படி கொடிய ஆக்கினை யிட்டான். அரசனின் அதிகாரிகள் அவ்வாக்கினையை நிறை வேற்று முன்னே கூரத்தாழ்வார் சோழனைப் பார்த்து, 'பாவியான உன்னைப்பார்த்த கொடிய கண்களால் பிறனைப் பாரேன்' என்று கூறி, தானாகவே தன் கண்களைப் பிடுங்கி எறிந்து, மீண்டும் திருவரங்கத்தை யடைந்தார். அவரிட்ட சாபத்தால் அரசன் பிளவை கண்டு இறந்தானென்பர்.

அரசனிறந்ததும் மகுடந்தரித்த அவன் மகன் தன் பிதா செய்த அபராதத்திற்கு வருந்தி, அதை நிவர்த்தி செய்யப் பல பரிகாரங்கள் செய்து, அன்று முதல் இதர மதத்தைத் துவேஷியாது நின்றனன். இதைக்கேட்ட இராமானுஜரும் திருவரங்கத்துக்குத் திரும்பிவந்து, பலவிடஞ் சென்று, வைஷ்ணவமதத்தைச் சீர்திருத்திப் பலரையும் அதன்பால் அன்புடன் சேரச்செய்து, ஆழ்வார் திருநகரி, திருப்பதி முதலிய தெய்வ ஆலயங்களில் நேர்ந்த வழக்குகளைத் தீர்த்து, ஆங்கு

திருவாராதனை, நைவேத்திய முதலியன குறைவறச்செவ்வியின் நடக்கும்படி செய்வித்து, தனக்குப்பின் தான்செய்த முறைப்படி காரியங்களை நடாத்துவதற்கும், ஆசிரியஸ்தானம் வகிப்பதற்கும் தகுந்த ஓர் பிரதிநிதியை நியமித்து, நூற்றிருபத்தோராவது வயதில் உயிர் நீத்தார்.

அவர் மகிமை விளங்க, ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்பூதூர், திருநாராயணபுரம் என்னும் ஊர்களிலுள்ள விண்டு ஆலயங்களில் அவர் பிம்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்றும் பூஜிக்கப்படுகிறது.

சுயநன்மையைக் கருதி தமக்கென்றே பொருளைத்தேடுவதில் சற்றும் மனதைச் செலுத்தாது மத நன்மைக்காகவும் பிறர் நன்மைக்காகவும் இராமானுஜர் உழைத்ததுபோல் ஆத்மார்த்தமாக உழைப்போர் கிடைப்பது அரிதென்றோ ?

முற்றிற்று.

Printed at The Aurora Press, Madras—1924 (B)

பக்த சிரோமணிகள் சரித்திரச் சுருக்கம்

இராமானுஜர்	0	1	0
திருமங்கை மன்னன்	0	2	0
நம்மாழ்வார்	0	2	0
குலசேகரன்	அச்சில்		
திருப்பாணாழ்வார்	,,		
மதுரகவிகள்	,,		
தொண்டரடிப்பொடி ஆழ்வார்	,,		
ஸ்ரீமந்நாதமுனிகள்	,,		

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
சென்னை.

ஆசாரிய சரித்திர மாலை

(ஆசாரியர்களின் திருவுருவப் படங்களமைந்தது)

1. ஸ்ரீ வேத வியாசர்
2. ஸ்ரீமத் சங்கராசாரியர்
3. ஸ்ரீமத் ராமானுஜாசாரியர்
4. ஸ்ரீ மத்வாசாரியர்
5. ஸ்ரீ வல்லபாசாரியர்
6. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்
7. ஸ்ரீ வித்யாரண்யர்
8. ஸ்ரீ வேதாந்த தேசிகாசாரியர்

ஆகிய எட்டு சரித்திரங்கள் அடங்கியது.

விலை அணா

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னதம்பித் தெரு, சென்னை